சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாட்டை தலை குனிய விடமாட்டேன் 'ஓரணியில் தமிழ்நாடு' தீர்மான ஏற்பு மாபெரும் பொதுக் கூட்டம் மாவட்டச் செயலாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ தலைமையில் நடைபெற்றது. இதில் மனுஷ்ய புத்திரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ஜெ.ஜெ.எபினேசர் எம்.எல்.ஏ., ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ., தா.இளைய அருணா மற்றும் கழக முன்னணியினர் கலந்து கொண்டனர்.

"நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டம் இதுவரை 223 முகாம்கள் நடத்தப்பட்டு 3.36 இலட்சம் பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்!

கடலூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை பல்வேறு கட்டமைப்புகள் மேம்படுத்தி திறந்து வைப்பு!

திருப்பெரும்புதூரில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டத்தை ஆய்வு செய்து பேட்டி!

சென்னை, செப்.21-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (20.09.2025) காஞ்சிபுரம் மாவட்டம், திருபெரும்புதூர் வட்டம், ஐமீன் தண்டலம் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட முகாமினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, இம்முகாமில் தொழிலாளர்களுக்கு நலவாரிய அட்டைகள், தூய்மை பணியாளர்களுக்கு நலவாரிய அட்டைகள், மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய அடையாள அட்டைகள், கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கினார்கள்.

பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்த தாவது:

"நலம் காக்கும் ஸ்டாலின்" திட்டம் முகாம்

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கடந்த 02.08.2025 அன்று சென்னையில் தொடங்கி வைக்கப்பட்ட ஒரு மகத்தான திட்டம் "நலம் காக்கும் ஸ்டாலின்" எனும் மகத்தான திட்டம். மக்கள் நல்வாழ்வுத்துறையில் மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக்காக்கும் 48, இதயம் காப்போம், நடப்போம் நலம் பெறுவோம், மக்களைத் தேடி மருத்துவ ஆய்வக திட்டம், தொழிலாளர்களை தேடி மருத்துவம் திட்டம், சிறுநீரகம் பாதுகாக்கும் சீர்மிகு திட்டம், செயற்கை கருத்தரித்தல் மையங்கள் என்று பல்வேறு வகையான திட்டங்கள் இன்று பயன்பாட்டில் இருந்து வருகிறது. மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தில் இல்லம் தேடிச் சென்று மருந்துகள் வழங்கும் நிலை இருந்தது, ஆனால் நலம் காக்கும் ஸ்டாலின் திட்டத்தில் மக்கள் வசிக்கும் இடங்களிலேயே மருத்துவ முகாம்கள் நடத்தி முழு உடற் பரிசோதனைகள் செய்யப்பட்டு வருகிறது. இந்த முகாம்கள் ஒவ்வொரு சனிக்கிழமையும் தமிழ்நாட்டில் உள்ள 38 வருவாய் மாவட்டங்களில் நடத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 1256 மருத்துவ முகாம்கள் நடத்த

திட்டமிடப்பட்டு 388 ஒன்றியங்களில் தலா 3 என்கின்ற வகையிலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 இடங்களிலும், 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட 5 மாநகராட்சிகளில் தலா 4 என்கின்ற வகையிலும், 10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட 19 மாநகராட்சிகளில் தலா 3 என்கின்ற வகையிலும் 1256 முகாம்கள் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு, ஒவ்வொரு வாரம் சனிக்கிழமைகளில் நடைபெற்று வருகிறது. இன்று தமிழ்நாடு முழுவதும் சென்னை நீங்கலாக 37 இடங்களில் முகாம் நடைபெற்று வருகிறது. இம்முகாம்களில் பொது மருத்துவம், குழந்தைகள் நல மருத்துவம், இருதயவில் நல மருத்துவம், எலும்பியல் மருத்துவம், நரம்பியல் மருத்துவம், தோல் மருத்துவம், மகப்பேறியியல் மற்றும் மகளிர் மருத்துவம், கண் மருத்துவம், காது மூக்கு தொண்டை மருத்துவம், இயன்முறை மருத்துவம், பல் மருத்துவம், மன நல மருத்துவம், நுரையீரல் மருத்துவம், கதிரியிக்கவியல் மருத்துவம், நீரிழிவியல் மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, இந்திய முறை மருத்துவம் என்று 17 வகையான மருத்துவ சிகிச்சைகள் இம்முகாமில் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் மக்களிடையே நல்ல வரவேற்பு பெற்று வருகிறது. கடந்த வாரம் நடைபெற்ற முகாமில் 75,460 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள். அந்த வகையில் இன்று தமிழ்நாட்டில் 37 இடங்களில் ஏராளமான பேர் பயன்பெற்று இருக்கிறார்கள். இன்று முற்பகல் வரை ஏறத்தாழ20,000 மேற்பட்டவர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள். காஞ்சிபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரை ஏற்கெனவே 6 முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. இந்த முகாமில் இதுவரை 7,588 பேர் பயன்பெற்றிருக்கிறார்கள். இன்று 7வது வாரமாக இந்த முகாம் தற்போது நடைபெற்று வருகிறது.

பருவ மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம் தொடர்பான கேள்விக்கு

ஒவ்வொரு பருவமழைக்கும் மழைக்கால சிறப்பு முகாம்கள் நடத்தப்படும். கடந்த 4.5 ஆண்டுகளில் ஒவ்வொரு பருவமழைக்கும் 1000த்திற்கும் மேற்பட்ட முகாம்கள் ஒரே நேரத்தில் நடத்தப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் 7000த்திற்கும் மேற்பட்ட முகாம்கள் நடத்தப்பட்டுள்ளது. அந்தவகையில் இந்த ஆண்டும் பருவமழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்படும். வடகிழக்கு பருவமழைக்கு முன்பாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து பல்வேறு சேவை துறைகளை ஒருங்கிணைத்து ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட உள்ளது. நகர்ப்புற வளர்ச்சித்துறை, ஊரக உள்ளாட்சித்துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை போன்ற பல்வேறு துறைகள் ஒருங்கிணைத்து கூட்டம் நடத்தப்படும்.

அன்புமணி மருத்துவமனைக்கு பூட்டு போடும் போராட்டம் குறித்த கேள்விக்கு

கடலூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனை என்பது சிதம்பரம் ராஜா முத்தையா மருத்துவக்கல்லூரி என்கின்ற பெயரில் 1985ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. திரு.முத்தையா செட்டியார் அவர்களால் நிறுவப்பட்டது. இந்த மருத்துவக்கல்லூரி மருத்துவமனை என்பது 2021 ஜனவரி திங்கள் 27 ஆம் தேதி உயர்கல்வித்துறையின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. கொண்டு வரப்பட்ட 5 மாதங்களில் திமுக அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு சிறப்பு அலுவலர் மற்றும் கல்லூரி முதல்வர் அவர்களை நியமித்து, ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருந்த மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அரசு சார்பில் பல்வேறு வகைகளிலான மருத்துவக் கட்டமைப்புகள் மேம்படுத்தி திறந்து வைக்கப்பட்டுள்ளது. ரூ.12 கோடி செலவில் ஒருங்கிணைந்த பேறு கால அவசர சிகிச்சை மற்றும் பச்சிளங்குழந்தை தீவிர சிகிச்சை மையம் போன்ற மருத்துவ கட்டமைப்புகள் இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு கட்டி தரப்பட்டுள்ளது. ரூ.1 கோடி செலவில் ஒருங்கிணைந்த பொது சுகாதார ஆய்வ கட்டிடமும், ரூ.18 கோடி செலவில் Trauma பிளாக் ஒன்று கட்டித் தரப்பட்டுள்ளது. ரூ.7.60 கோடி மதிப்பீட்டில் கேத்லேப் அமைக்கப்பட்டுள்ளது. ரூ.24 கோடியில் உயர் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. ரூ.7.80 கோடி மதிப்பீட்டில் சிடி ஸ்கேன் கருவியும், MRI கருவிகளும் வழங்கப்பட்டுள்ளது. இந்த அரசுப் பொறுப்பேற்றதற்கு பிறகு மட்டும் ரூ.6.40 கோடி மதிப்பீட்டில் மருந்துகள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. ரூ.25 கோடியில் ரேடியோதெரபி மற்றும் லினாக் கருவிகள் அமைக்கப்படும் பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது. ஆக இந்த பணிகள் எல்லாம் ஒரு புதிய மருத்துவக்கல்லூரியில் செய்யப்பட வேண்டியது. ஆனால் உயர்கல்வித்துறையின் நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டுள்ள ஒரு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு இந்த அரசு செய்துள்ளது. அது மட்டுமல்லாமல் இந்தக் கல்லூரியில் 23.01.2025 அன்று அரசாணை மூலம் 194 மருத்துவர்கள் மற்றும் பல் மருத்துவர்கள் பணியிடம் உருவாக்கப்பட்டு 04.02.2025 அன்று 102 பேர் பணியில் சேர்ந்திருக்கிறார்கள். 29 பல் மருத்துவர்கள் நியமிக்கப்பட்டு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதனை கருத்தில் கொள்ளாமல் இந்த மருத்துவக்கல்லூரி மருத்துவமனை பயன்பாட்டில் இல்லை என்று சொல்வது அறியாமையின் உச்சம். பொதுவாக ஒரு மருத்துவர் மருத்துவமனையை திறப்பவராக இருக்க வேண்டும், அதை விட்டு மருத்துவமனைக்கு பூட்டு போடுபவராக இருக்கக் கூடாது, எங்களது இலக்கு என்பது மருத்துவமனையை திறம்பட நடத்துவது மட்டுமே, பூட்டு போடுவதற்கு அல்ல.

இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இம்முகாமில் திருபெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நல வாரியத்தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கலைச்செல்வி மோகன், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துதுறை இயக்குநர் மரு.சோமசுந்தரம், இணை இயக்குநர் (மருத்துவப் பணிகள்) மரு.எம். ஹிலாரினா ஜோசிட்டா நளினி, மாவட்ட சுகாதார அலுவலர் மரு.த.ரா.செந்தில், மருத்துவ குழுவினர், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை கிழக்கு பகுதி இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் சி.பி.ராமசாமி சாலை உள்ள அலுவலகத்தில் பகுதி செயலாளர்கள் எஸ். முரளி முன்னிலையில் தலைமை டி.ஜெகதீஷ் பாபு மயிலை கிழக்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர். மாவட்ட துணை அமைப்பாளர் த.விக்னேஸ்வரன் வரவேற்புரையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு ஆலோசனை வழங்கினார். இக்கூட்டத்தில் மயிலை கிழக்கு பகுதி இளைஞர் அணி பகுதி துணை அமைப்பாளர்கள் வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

செங்கல்பட்டு மாவட்டம் எல். எண்டத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தமிழக அரசு சார்பில் அரசு பள்ளிகளை மேம்படுத்தும் விதமாக 1.58 கோடி மதிப்பிலான நான்கு வகுப்பறை கொண்ட புதிய கட்டிடம் கட்டுவதற்கான பணி ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஜீ. தம்பு தலைமையில் நடைபெற்றது. இதில் காஞ்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்எல்ஏ, காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம், ஒன்றிய பெருந்தலைவர் கண்ணன், ஆகியோர் கலந்து கொண்டு புதிய கட்டிடம் கட்டுவதற்கான பணியை தொடங்கி வைத்து பள்ளி மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு இனிப்புகளை வழங்கினர். இந்த நிகழ்ச்சியில் திமுக நிர்வாகிகள் டி. ஆர்.நாராயணன்,சிவபெருமான், மாவட்ட கவுன்சிலர் மாலதி, ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜலட்சுமி, சித்ரா, மற்றும் அரசு துறை அதிகாரிகள், பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

மாதவரம் மண்டலம் 28வது வார்டில், உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்எல்ஏ குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். அப்போது, பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்து, உதவிகளை செய்து தரும்படி அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார். இதில், மண்டலக் குழு தலைவர் நந்தகோபால், உதவி ஆணையர் கணேசன், கவுன்சிலர் கனிமொழி சுரேஷ், வட்டாட்சியர் அருள்ஜோதி, பொறியாளர் ஆனந்தராவ், உதவி செயற்பொறியாளர் முத்தமிழ்செல்வன், உதவி வருவாய் அலுவலர் லோகநாதன், உதவி பொறியாளர் உஷா மற்றும் அதிகாரிகள், கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

சென்னை தென்மேற்கு மாவட்டத்தில் ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்புக் கூட்டம்!

171 'அ' வட்டக் கழகத்தினர் பெருமளவில் பங்கேற்பீர்!

வட்டச் செயலாளர் பா.பொன்னுசாமி அறிக்கை!

சென்னை,செப்.21-

171 (அ) வது வட்ட தி.மு.க. வட்ட செயலாளர் பா.பொன்னுசாமி அறிக்கை வருமாறு:-

சென்னை தென்மேற்கு மாவட்ட கழக சார்பில் தமிழ் நாட்டை தலைகுனிய விட மாட்டேன்! ஓரணியில் தமிழ் நாடு தீர்மான ஏற்பு கூட்டம் இன்று (21.09.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணியளவில், சிலேட்டர் புரம், மயிலாப்பூரில் தென்மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு தலைமையில், ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ., மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ் முரளி, மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., தியாகராய நகர் மேற்கு பகுதி செயலாளர் கே. ஏழுமலை முன்னிலையில், திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் சிறப்புரை ஆற்றுகிறார்.

இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட, பகுதி, கழக நிர்வாகிகள், மாவட்ட பிரிதிநிதிகள், அணிகளின் நிர்வாகிகள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.

இக்கூட்டத்திற்கு 171 (அ) வது வட்டத்திற்குட்பட்ட மாவட்ட பிரிதிநிதி கள், மாவட்ட, பகுதி வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக பொறுப்பா ளர்கள், பாக உறுப்பினர்கள், பாக தகவல் தொழில்நுட்ப அணி, பாக இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் கழக தோழர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமென 171 (அ)வது வட்ட தி.மு.க. வட்ட செயலாளர் பா.பொன்னுசாமி அறிக்கை விடுத்துள்ளார்.

ஓரணியில் தமிழ்நாடு தீர்மான ஏற்பு பொதுக்கூட்டம்!

124 'அ' வட்டக் கழகத்தினர் பெருமளவில் பங்கேற்பீர்!

வட்டப் பொறுப்பாளர் மா.பா. அன்பு வேண்டுகோள்!

சென்னை, செப். 21-

சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பாக மயிலை கிழக்குப் பகுதியில் நடைபெறும் 'தமிழ்நாட்டை தலைகுனிய விடமாட்டேன்!' ஓரணியில் தமிழ்நாடு' தீர்மான ஏற்பு கூட்டம் இன்று (21.09.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 5:00 மணியளவில் சிலோட்டர் புரம், மயிலாப்பூர், சென்னை-04-ல் என்ற முகவரியில் சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த. வேலு, எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெறுகிறது.

மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ். முரளி மயிலை மேற்கு பகுதி செயலாளர் நந்தனம் கி. மதி எம்.சி., தியாகராய நகர் மேற்கு பகுதி செயலாளர் கே. ஏழுமலை எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஆ. சந்திரசேகர், நந்தனம் வேதா, மு. சத்யா, கே. மலர், என். அன்பழகன் ஆகியோர் வரவேற்கின்றனர்.

இக்கூட்டத்திற்கு திராவிட இயக்கத் தமிழர் பேரவை தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், தியாகராய நகர் கிழக்கு பகுதி கழக செயலாளர் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்

நமது 124 அ வட்டக் கழகத்தை சார்ந்த மாநில மாவட்ட பகுதி, வட்டக் கழகத்தின் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள், பாகப் பொறுப்பாளர்கள் BLA2, BDA, BLC அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு வட்டக் கழக பொறுப்பாளர் மா.பா.அன்பு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தாம்பரம் தொகுதிக்கு உட்பட்ட திருவஞ்சேரி ஊராட்சியில் அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னையில் நடைபெற்ற விழாவில், 243 பள்ளிகளில் ரூ.277 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள, வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கட்டடங்கள், குடிநீர் வசதிகள், உள்ளிட்ட கட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியதை தொடர்ந்து தாம்பரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட,புனித தோமையார் மலை ஒன்றியம், திருவஞ்சேரி ஊராட்சியில் உள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளியில், தாம்பரம் மாநகர செயலாளர்,எஸ்.ஆர்.ராஜா.எம்.எல்.ஏ, ரூ.1கோடியே 23 லட்சம் மதிப்பீட்டில் வகுப்பறைகள் கட்டிடம் கட்டும் பணிகளை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் திருவஞ்சேரி ஊராட்சி மன்ற தலைவர் ஜனனிசுரேஷ்பாபு , துணை தலைவர் ருக்மணி சக்தி,பள்ளி தலைமை ஆசிரியர் ராமலதா,புனித தோமையார் மலை ஒன்றிய அவைத் தலைவர் சக்தி, கிளைச் செயலாளர்கள் சுரேஷ்பாபு,மகி மனோகரன், லோகதாஸ் ஆகியோருடன் கழக நிர்வாகிகள், ஆசிரியர்கள், மற்றும் பள்ளி மாணவர்கள் பங்கேற்றனர்.